(2019) 13 எஸ்.சி.ஆர் 1056

டெல்லி அரசு மற்றும் பலர்

–எதிர்–

பிரதீப் குமார் மற்றும் பலர்

(உரிமையியல் மேல்முறையீடு எண்.8259/2019)

அக்டோபர் 24, 2019

[மாண்புமிகு நீதியரசர் திரு. ஆர். பானுமதி,
மாண்புமிகு நீதியரசர் திரு. ஏ.எஸ்.போபண்ணா
மற்றும்
மாண்புமிகு நீதியரசர் திரு. ஹிருஷிகேஷ் ராய்]

பணிச் சட்டம்

பணியமர்த்தம் – சிறப்புக் கல்வி ஆசிரியர்கள் – டெல்லி மாநில அரசு – மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வாக இருதரப்புக்கும் அவசியமான தகுதி – இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இடஒதுக்கீட்டிற்கு, ஆட்சேர்ப்பு விளம்பரத்தில் அத்தகைய விண்ணப்பதாரர்கள் டெல்லி அரசால் வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழை வைத்திருக்க வேண்டும் – மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வில் தகுதி மதிப்பெண்களில் 5 சதவீத தளர்வு பெற்ற எதிர்மேல்முறையீட்டாளர்கள்/விண்ணப்பதாரர்கள் தங்கள் மாநிலங்களில் இருந்து (டெல்லி அல்ல) இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கப்பட்ட பிரிவின் கீழ் விண்ணப்பித்து எழுத்துத் தேர்வில் கலந்து கொண்டவர்கள் – அவர்கள் மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த வெளியாட்களாகத் தகுதி பெற்றவர்கள் என்பதால் தகுதியற்றவர்கள் எனக் கூறி அவர்கள் விண்ணப்பிப்பதற்கு மறுக்கப்பட்டது – மத்திய நிர்வாகத் தீர்ப்பாயம் அவர்களின் மனுவை ஏற்றுக்கொண்டு, விண்ணப்ப மனு நிராகரிக்கப்பட்டதற்கு எதிரான

உத்தரவை ரத்து செய்து, தகுதியான விண்ணப்பதாரர்களைப் பொதுப் பிரிவில் அவர்களின் தகுதி நிலை அடிப்படையில் நியமிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டது – தீர்ப்பாயத்தின் உத்தரவை உயர் நீதிமன்றம் உறுதி செய்தது – உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டது – முடிவு : விண்ணப்பதாரர்கள் டெல்லி அரசின் மூலம் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக சான்றளிக்கப்படாததால், அவர்கள் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பிரிவில் தகுதி உடையவர்களாகக் கருதப்பட முடியாது –மேலும், தகுதிச் சான்றுகளில் தளர்வுகளைப் பயன்படுத்திக்கொண்ட இடஒதுக்கீடு பிரிவின் விண்ணப்பதாரர்கள் பொதுப் பிரிவிற்குள் மாறுவதற்கு அலுவலகக் குறிப்பாணையின் கீழ் வெளிப்படையான தடை இருப்பதால், அவர்கள் பொதுப் பிரிவிலும் கருதப்பட முடியாது.

இடஒதுக்கீடு – அரசியலமைப்பின் கீழ் உள்ள இடஒதுக்கீடு கொள்கைகள் ஒரு குறிப்பிட்ட ஒதுக்கீடு செய்யப்பட்ட பிரிவிற்குள் மட்டுமே கட்டுப்படுத்தப்பட வேண்டும். அத்துடன், பொதுப் பிரிவில் உள்ள தகுதி மற்றும் திறமைகளின் நீர்த்துப் போவதைத் தவிர்க்க, அப் பிரிவு பாதுகாக்கப்பட வேண்டும்.

மேல்முறையீட்டை அனுமதித்த நீதிமன்றம் தீர்மானித்ததாவது:–

1. விளம்பர எண்.1/13–இன் கூறு 6 (iii)–இன் கீழ் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பிரிவில் இடஒதுக்கீடு பெற, அந்த வகுப்பைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள் டெல்லி அரசால் மட்டுமே வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டியது அவசியமாகும். ஆகையால், டெல்லி ஆட்சேர்ப்புச் செயல்பாட்டில், எதிர்மேல்முறையீட்டாளர்கள் இதர

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (டெல்லி) சான்றிதழைப் பெற்றிருக்கவில்லை, இதனால் அவர்கள் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பிரிவின் காலியிடங்களுக்குப் பரிசீலிக்கப்பட முடியாது. மேலும், மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வு வழிகாட்டுதல்களின்படி, பொதுப் பிரிவின் விண்ணப்பதாரர்கள் தேர்ச்சி பெற 60 சதவீத மதிப்பெண்கள் பெற வேண்டும். எதிர்மேல்முறையீட்டாளர்கள் மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வில் 60 சதவீதத்திற்கும் குறைவான மதிப்பெண்களைப் பெற்றிருப்பதால், அவர்களின் விண்ணப்பம் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பிரிவின் கீழ் மட்டுமே செல்லுபடியாகும். இருப்பினும், டெல்லி அரசின் மூலம் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் தகுதிக்கான சான்றிதழ் இல்லாததாலும், மற்றும் வெளிமாநில இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இடஒதுக்கீட்டைத் தடை செய்யும் ஆட்சேர்ப்பு விளம்பரத்தின் கூறு 6(iii)–இன் காரணமாகவும், எதிர்மேல்முறையீட்டாளர்கள் விண்ணப்பித்த பதவிக்குத் தகுதியற்றவர்கள் ஆவர். இருப்பினும், அவர்கள் மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வில் குறைந்தபட்சம் 60 சதவீத மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்றால், பொதுப் பிரிவில் உள்ள காலியிடங்களுக்கு விண்ணப்பிக்கலாம். விளம்பரத்தின்படி, எதிர்மேல்முறையீட்டாளர்கள் எவரும் டெல்லி அரசின் மூலம் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினராகச் சான்றளிக்கப்படவில்லை என்பதும், அத்துடன் ஒரே கட்டத் தேர்வுக்குத் தகுதிபெறத் தேவையான 60 சதவீத மதிப்பெண்களை மத்திய ஆசிரியர் தகுதித் தேர்விலும் அவர்கள் பெறவில்லை என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. டெல்லிக்கு வெளியே உள்ள மாநிலம்/பிரதேசத்தில் சான்றளிக்கப்படாத ஒரு இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினரான விண்ணப்பதாரர், டெல்லி அரசால்

சான்றளிக்கப்பட்ட இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்காக ஒதுக்கப்பட்ட இடஒதுக்கீடு பிரிவின் பதவிகளில் வேலைவாய்ப்பைப் பெறத் தகுதியுடையவராக இருக்க முடியாது.

2. பணியாளர் மற்றும் பயிற்சித் துறையால் வழங்கப்பட்ட 01.07.1998 மற்றும் 04.04.2018 தேதியிட்ட அலுவலகக் குறிப்பாணைகள் ஒரு குறிப்பிட்ட அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளன, அதன்படி, வயது வரம்பு, அனுபவம், கல்வித் தகுதி, எழுத்துத் தேர்வில் கூடுதல் வாய்ப்புகள் போன்றவற்றில் இடஒதுக்கீடு பிரிவின் விண்ணப்பதாரரைத் தேர்ந்தெடுக்கும்போது தளர்வு அளிக்கப்பட்ட தரநிலைகள் பயன்படுத்தப்பட்டால், அத்தகைய விண்ணப்பதாரர்கள் இடஒதுக்கீடு செய்யப்பட்ட காலியிடங்களுக்கு எதிராகக் கருதப்படுவார்கள். கல்வித் தகுதிக்கான தளர்வுகள் உட்பட, தளர்வுகளைப் பயன்படுத்திக்கொண்ட இடஒதுக்கீடு பிரிவின் விண்ணப்பதாரர்கள் பொதுப் பிரிவிற்குள் மாறுவதற்கு வெளிப்படையான தடை உள்ளது. எனவே, விளம்பரத்தில் உள்ள மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வு தொடர்பான தகுதி விதிகள், 01.07.1998 தேதியிட்ட அலுவலகக் குறிப்பாணையின் உள்ளடக்கங்களைக் கருத்தில் கொண்டே புரிந்து கொள்ளப்பட வேண்டும். தற்போதைய பொருண்மைகளுக்கு இந்த விளம்பரத்தைப் பொருத்திப் பார்ப்பது சரியாக இருக்காது. இதே நிலைதான் 01.07.1998 தேதியிட்ட அதே அலுவலகக் குறிப்பாணையிலும் உள்ளது. கல்வித் தகுதிக்கான தளர்வுகள் உட்பட, தளர்வுகளைப் பயன்படுத்திக்கொண்ட இடஒதுக்கீடு பிரிவின் விண்ணப்பதாரர்கள் பொதுப் பிரிவிற்குள் மாறுவதற்கு வெளிப்படையான தடை உள்ளது. எனவே, விளம்பரத்தில் உள்ள மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வு தொடர்பான தகுதி விதிகள், 01.07.1998 தேதியிட்ட அலுவலகக்

குறிப்பாணையின் உள்ளடக்கங்களைக் கருத்தில் கொண்டே புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

தீபா ஈ.வி –எதிர்– இந்திய ஒன்றியம் (2017) 12 **எஸ்.சி.சி 680 – சார்வுறப்பட்டது.**

3. தற்போதைய வழக்கில், விண்ணப்பதாரர்கள் (அதாவது எதிர்மேல்முறையீட்டாளர்கள்) டெல்லியைத் தவிர வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர். அவர்கள் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக (வெளிமாநிலத்தவர்களாக) இருப்பதால், மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வில் குறைந்தபட்சம் 60 சதவீத மதிப்பெண்களைப் பெற்றிருந்தால் மட்டுமே பொதுப் பிரிவின் கீழ் பரிசீலிக்கப்பட முடியும். எதிர்மேல்முறையீட்டாளர்கள் 60 சதவீத மதிப்பெண்கள் பெறவில்லை என்பது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது, இதனால் அவர்கள் தகுதியற்றவர்கள் ஆவர்.

4. எதிர்மேல்முறையீட்டாளர்கள் பொதுப் பிரிவின் காலியிடங்களுக்கு விண்ணப்பித்தனர். இந்தக் குழுவில் உள்ள மற்ற அனைவரும், தேர்ச்சித் தளர்வு விதிமுறைகளைப் பயன்படுத்தாமல், சாதாரண தேர்ச்சி மதிப்பெண்களைப் பெற்று, தங்களது மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வு தகுதியைப் பெற்றுள்ளனர். மறுபுறம், எதிர்மேல்முறையீட்டாளர்கள் மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வில் குறைந்த மதிப்பெண்களைப் பெற்றிருந்தபோதிலும், அவர்கள் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பிரிவைச் சேர்ந்த தேர்வர்களாகத் தளர்வுப் பலன்களைப் பயன்படுத்திக் கொண்டதால் மட்டுமே தகுதி பெற முடிந்தது. அவர்களின் தகுதிச் சான்று இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான தளர்வான

விதிமுறைகளின் கீழ் பெறப்பட்டதால், அவர்களைப் பொதுப் பிரிவின் காலியிடங்களுக்குத் தகுதியுடையவர்களாகப் பரிசீலிப்பது சரியல்ல.

5. எதிர்மேல்முறையீட்டாளர்கள் தளர்வான விதிமுறைகளின் கீழ் பெற்ற மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வு தகுதியுடன், அவர்களின் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நிலை டெல்லி அரசால் சான்றளிக்கப்பட்டும் அங்கீகரிக்கப்பட்டும் இருந்தால் மட்டுமே, அந்தப் பிரிவின் பதவிகளுக்குத் தகுதியுடையவர்கள் ஆவார்கள். ஆனால், நிலைமை அப்படி இல்லாததால், அவர்கள் இடஒதுக்கீடு செய்யப்பட்ட பிரிவின் காலியிடங்களுக்குத் தகுதியற்றவர்கள் ஆவர். இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்காக வழங்கப்பட்ட தேர்ச்சி மதிப்பெண்களின் தளர்வுடன் கூடிய மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வில் தகுதியைப் பெற்ற ஒரே காரணத்திற்காக, அவர்களைப் பொதுப் பிரிவின் காலியிடங்களுக்கு மாறவும் போட்டியிடவும் அனுமதிப்பது ஏற்புடையதல்ல. எதிர்மேல்முறையீட்டாளர்கள் பொதுப் பிரிவிற்கான சாதாரண தேர்ச்சி மதிப்பெண்களைப் பெறாததால், பொதுப் பிரிவின் காலியிடங்களுக்கு அவர்களது தகுதியானது உறுதி செய்யப்படவில்லை. எனவே, தற்போதைய செயல்பாட்டில், தேர்வில் அவர்களின் செயல்திறன் எந்த விதத்திலும் பொருத்தமற்றதாக இருக்கும்.

6. இந்த வழக்கு, தேர்ச்சி மதிப்பெண்களில் சலுகையுடன் பெறப்பட்ட தகுதிகள் தொடர்புடையது. இத்தகைய சலுகை சிறப்புக் கல்வி ஆசிரியர்களை நியமிப்பதில் திறன் மற்றும் தகுதி தரநிலைகளில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்தும். இந்திய அரசியலமைப்பின் கீழ் இட ஒதுக்கீடு கொள்கைகள் குறிப்பிட்ட வகையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட பிரிவுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்க வேண்டும், மேலும் திறன் மற்றும் தகுதி

குறைந்துபோவதைத் தவிர்க்க, இட ஒதுக்கீடு செய்யப்படாத பிரிவு பாதுகாக்கப்பட வேண்டும்.

விகாஸ் சங்கலா மற்றும் பலர் –எதிர்– விகாஸ் அகர்வால் மற்றும் பலர் (2017) 1 எஸ்.சி.சி. 350 : [2016] 7 எஸ்.சி.ஆர். 639 – வேறுபடுத்திக்காட்டப்பட்டுள்ளது.

வழக்குச் சட்ட பார்வை

[2016] 7 எஸ்.சி.ஆர். 639 வேறுபடுத்திக்காட்டப்பட்டுள்ளது பத்தி 6

(2017) 12 எஸ்.சி.சி 680 சார்வுறப்பட்டது பத்தி 22

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு : உரிமையியல் மேல்முறையீடு எண்.8259/2019.

புது டெல்லியில் உள்ள டெல்லி உயர்நீதிமன்றத்தின் நீதிப்பேராணை மனு (உ) எண்.557/2019 இல் 21.01.2019 தேதியிட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து எழுகிறது.

மேல்முறையீட்டாளர்களுக்காக – திருமதி. மாதவி திவான், அரசு கூடுதல் தலைமை வழக்குரைஞர், ஆர். பாலசுப்ரமணியம், மூத்த வழக்குரைஞர், மஹாலிங் பாண்டார்கே, ஆயுஷ் பூரி, பிவி பலராம் தாஸ்.

எதிர்மேல்முறையீட்டாளர்களுக்காக – திருமதி. ஐஸ்வர்யா பாட்டி, மூத்த வழக்குரைஞர், சச்சின் சௌஹான், திருமதி சித்ராங்தா ஆர்., செலஸ்டி அகர்வால், நிதின் சௌத்ரி, ஆர்.சி.கௌசிக்.

நீதிமன்றத் தீர்ப்புரை மாண்புமிகு நீதியரசர் திரு. ஹிருஷிகேஷ் ராய் அவர்களால் பகரப்பட்டது.

1. அனுமதி வழங்கப்பட்டது.

2. மேல்முறையீட்டாளர்கள் சார்பில் முன்னிலையான கற்றறிந்த கூடுதல் உதவி தலைமை வழக்குரைஞர் திருமதி மாதவி திவான் அவர்களின் வாதங்கள் கேட்கப்பட்டன. 2 முதல் 6 வரையிலான எதிர்மேல்முறையீட்டாளர்கள் சார்பில் கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திருமதி ஐஸ்வர்யா பாட்டி முன்னிலையானார். எதிர்மேல்முறையீட்டாளர்களும் மேலும் சிலரும் மத்திய நிர்வாகத் தீர்ப்பாயத்தின் முன் மு.வ. எண். 1047/2014 என்ற வழக்கைத் தாக்கல் செய்திருந்தனர், அது 20.08.2018 அன்று அனுமதிக்கப்பட்டது (பின்னிணைப்பு பி/5). நீதிப்பேராணை மனு (உ) எண்.557/2019 இல் டெல்லி உயர்நீதிமன்றத்தின் எதிர்ப்புக்குள்ளான உத்தரவின் கீழ் மேல்முறையீட்டாளர்களின் எதிர்ப்பு தள்ளுபடி செய்யப்பட்டது, இதுவே தற்போதைய மேல்முறையீட்டிற்குக் காரணமாகும்.

3. இந்த வழக்கு, டெல்லி தேசிய தலைநகர் அரசின் கீழ் உள்ள சிறப்புக் கல்வி ஆசிரியர்கள் ஆட்சேர்ப்பு தொடர்பானது. டெல்லி துணைப் பணித் தேர்வுக் குழுமத்தால் வெளியிடப்பட்ட விளம்பர எண். 01/2013 (பின்னிணைப்பு பி/1)–இன் கீழ், தபால் குறியீடு 01/13–இன் கீழ் உள்ள சிறப்புக் கல்வி ஆசிரியர்கள் காலியிடங்களுக்குப் பின்வரும் அத்தியாவசியத் தகுதிகள் நிபந்தனைகளாக விதிக்கப்பட்டிருந்தன:–

"––

i) பட்டப்படிப்புடன் பி.எட் (சிறப்புக் கல்வி) அல்லது பி.எட். உடன் இரண்டு வருடச் சிறப்புக் கல்வி

டிப்ளோமா அல்லது சிறப்புக் கல்வியில் முதுகலை தொழில்முறை டிப்ளோமா அல்லது இந்திய மறுவாழ்வு கவுன்சிலால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் அதற்கு இணையான தகுதி.

ii) மத்திய இடைநிலைக் கல்வி வாரியத்தால் நடத்தப்படும் மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வு.

----------"

4. எதிர்மேல்முறையீட்டாளர்கள், டெல்லியைத் தவிர வேறு மாநிலங்களில், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான தளர்வான தேர்ச்சி விதிமுறைகளின் கீழ், மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வு தகுதியைப் பெற்றிருந்தனர். அவர்கள் டெல்லியில் உள்ள காலிப் பணியிடங்களுக்குத் தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பித்து, ஆட்சேர்ப்புத் தேர்வில் முன்னிலையானார்கள். ஆனால், அவர்களின் விண்ணப்பங்கள், 19.02.2014 தேதியிட்ட அலுவலக உத்தரவு (பின்னிணைப்பு பி/2) மூலம், தகுதியற்றதாகக் கருதப்பட்டன. அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள காரணம் என்னவென்றால், விண்ணப்பதாரர்கள் "இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வில் தகுதி பெற்றவர்கள், ஆனால் அவர்கள் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த வெளிமாநிலத்தவர்" என்பதே ஆகும்.

5.1. டெல்லி துணைப் பணித் தேர்வுக் குழுமத்தின் முடிவால் பாதிக்கப்பட்ட அசல் விண்ணப்பதாரர்கள் (9 பேர்), அனைவரும் இணைந்து மத்திய நிர்வாகத் தீர்ப்பாயத்தின் முன் மு.வ. எண். 1047/2014 என்ற வழக்கைத் தாக்கல் செய்தனர். இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள், தங்கள் சொந்த மாநிலங்களிலிருந்து மத்திய ஆசிரியர்

தகுதித் தேர்வில் தேர்ச்சி மதிப்பெண்களில் 5 சதவீத தளர்வைப் பயன்படுத்திக்கொண்டு தகுதியைப் பெற்றிருந்தனர், ஆனால் அவர்கள் டெல்லியில் உள்ள காலிப் பணியிடங்களுக்காக நடத்தப்பட்ட எழுத்துத் தேர்வில் பங்கேற்றனர். மத்திய நிர்வாகத் தீர்ப்பாயத்தின் முன், அசல் விண்ணப்பதாரர்கள் தாங்கள் பொதுப் பிரிவின் கீழ் கடைசியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களை விட அதிக மதிப்பெண்களைப் பெற்றதாகவும், ஆட்சேர்ப்புத் தேர்வில் தங்கள் செயல்திறனின் அடிப்படையில் மட்டுமே தேர்வுக்கான கோரிக்கை வைக்கப்பட்டிருந்தபோதிலும், தங்கள் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுவிட்டதாகவும் குறிப்பிட்டனர்.

5.2. எனினும், மறுபுறம், டெல்லி தேசிய தலைநகர் அரசு தீர்ப்பாயத்தின் முன், டெல்லியில் உள்ள இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான காலியிடங்களுக்காகப் பலன்களைக் கோருவதற்கு, அந்த இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் சான்றிதழ் டெல்லி அரசால் வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்று வாதிட்டது. எதிர்மேல்முறையீட்டாளர்கள் டெல்லியில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக அங்கீகரிக்கப்படாததால், மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வில் குறைந்த தேர்ச்சி மதிப்பெண்களுடன் கூடிய மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வுத் தகுதியை அவர்கள் கோர முடியாது.

6. தீர்ப்பாயம், எதிரெதிர் வாதங்களைக் கருத்தில் கொண்டதுடன், அசல் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்களை நிராகரிப்பது என்பது, மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வின் தகுதியை மேல்முறையீட்டாளர்கள் அங்கீகரிக்கவில்லை என்பதைக் குறிக்கும் என்று குறிப்பிட்டது. விகாஸ் சங்கலா மற்றும் பலர் –எதிர்– விகாஸ் அகர்வால் மற்றும் பலர் (2017) 1

எஸ்.சி.சி. 350 என்ற வழக்கை அடிப்படையாகக் கொண்டு, இறுதித் தகுதிப் பட்டியலைத் தயாரிப்பதில் மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வு மதிப்பெண்களுக்கு எந்த முக்கியத்துவமும் கொடுக்கப்படாவிட்டால், தகுதியுள்ள விண்ணப்பதாரர்களைப் பொதுப் பிரிவில் பரிசீலிப்பதில் எந்தத் தடையும் இருக்காது என்று தீர்ப்பாயம் கருத்து தெரிவித்தது. அதன் விளைவாக, அசல் விண்ணப்பதாரர்களை அவர்களின் தகுதிப் பட்டியலில் உள்ள நிலைக்கேற்ப நியமிக்க அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

7. தீர்ப்பாயத்தின் உத்தரவு, டெல்லி தேசிய தலைநகர் அரசால் உயர் நீதிமன்றத்தில் எதிர்த்து மனுத் தாக்கல் செய்யப்பட்டது. எதிர்மேல்முறையீட்டாளர்கள் மற்ற மாநிலங்களின் நிரந்தர குடியிருப்பாளர்களாக இருந்ததால், அவர்களால் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் பிரிவின் கீழ் சலுகையைப் பெற முடியாது என்று நீதிப்பேராணை மனு (உ) எண். 557/2019-இல், மேல்முறையீட்டாளர்கள் வாதிட்டனர். எதிர்மேல்முறையீட்டாளர்கள் பொதுப் பிரிவின் கீழ் பரிசீலிக்கப்பட முடியாது, ஏனெனில் மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வில் தகுதி பெறுவதற்கு அப்பிரிவுக்குக் குறைந்தபட்சம் 60 சதவீத மதிப்பெண்கள் தேவைப்படும். எனவே, ஆட்சேர்ப்புத் தேர்வில் மனுதாரர்களின் செயல்திறனைப் பொருட்படுத்தாமல், பொதுப் பிரிவின் காலியிடங்களுக்கான அவர்களின் விண்ணப்பம் செல்லாது என்று மேல்முறையீட்டாளர்கள் உயர் நீதிமன்றத்தில் வாதிட்டனர்.

8. இருப்பினும், உயர் நீதிமன்றம் தனது எதிர்ப்புக்குள்ளான உத்தரவில், குறைந்த தேர்ச்சி மதிப்பெண்களுடன் கூடிய மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வின் தகுதியின் அடிப்படையில் விண்ணப்பித்த

வேட்பாளர்கள், அத்தேர்வில் 60 சதவீதத்திற்கும் குறைவான மதிப்பெண்களைப் பெற்றிருந்தால், பொதுப் பிரிவின் காலியிடங்களுக்குத் தகுதி பெற மாட்டார்கள் என்று விளம்பரத்தில் குறிப்பிடப்படவில்லை என்று குறிப்பிட்டது. அதன்படி, ஒரு விண்ணப்பதாரர் மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வில் தகுதியைப் பெற்றவுடன், பொதுப் பிரிவின் காலியிடங்களுக்கான அவர்களின் விண்ணப்பத்தைப் பரிசீலிப்பதற்கு, அத்தகுதித் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் முக்கியமற்றவை என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. பொதுப் பிரிவில் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்ற விண்ணப்பதாரர்களை விட எதிர்மேல்முறையீட்டாளர்களின் செயல்பாடு அதிக தகுதிவாய்ந்ததாக இருந்ததால், எதிர்மேல்முறையீட்டாளர்களுக்குச் சாதகமான தீர்ப்பாயத்தின் முடிவு உறுதி செய்யப்பட்டது, அதன்படி, மேல்முறையீட்டாளர்களால் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

9.1. இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான தளர்வான விதிமுறைகளின் கீழ் தகுதிச் சான்றைப் பெற்றிருப்பதால், எதிர்மேல்முறையீட்டாளர்கள் பொதுப் பிரிவின் காலியிடங்களுக்குப் பரிசீலிக்கத் தகுதியற்றவர்கள் ஆவர் என்ற வாதத்துடன், டெல்லி உயர் நீதிமன்றத்தின் முடிவை மேல்முறையீட்டாளர்கள் எதிர்த்தனர். கற்றறிந்த இந்திய கூடுதல் உதவி தலைமை வழக்குரைஞர் திருமதி மாதவி திவான் அவர்கள், எதிர்மேல்முறையீட்டாளர்கள் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான தளர்வான விதிமுறைகளின் கீழ் குறைந்த தேர்ச்சி மதிப்பெண்களுடன் தகுதிச் சான்றைப் பெற்றிருப்பதால், டெல்லியில் உள்ள பொதுப் பிரிவின் காலியிடங்களில் வேலைவாய்ப்புக்கு அவர்கள்

தகுதியற்றவர்கள் என்று சரியாகவே கண்டறியப்பட்டனர் என்று சமர்ப்பித்தார்.

9.2. மேற்படிக்கு விகாஸ் சங்கலா வழக்கின் பொருண்மைகளையும் தீர்ப்பின் முக்கியக் கோட்பாட்டையும் விளக்கி, திருமதி திவான் அவர்கள், இந்தத் தீர்ப்பு உடனடியாக உள்ள வழக்கில் உள்ள பொருண்மைகளுக்குத் தீர்ப்பாயத்தால் தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது, என்றும், ஏனெனில், தற்போதைய ஆட்சேர்ப்புக்கு (விளம்பர எண். 01/13–இன் கீழ்) மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வில் வெறும் தகுதி மட்டுமே (மதிப்பெண்களுக்குப் பதிலாக) முக்கியத்துவம் பெறும், ஆனால் மேற்படி விகாஸ் சங்கலா வழக்கில், மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வின் மதிப்பெண்கள் ஆட்சேர்ப்புச் செயல்முறையில் முக்கியத்துவம் பெற்றிருந்தது. மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வு தற்போதைய வழக்கில் வெறும் தகுதிச் சான்றாக இருப்பதற்கும், இராஜஸ்தானில் உள்ள ஆட்சேர்ப்புச் செயல்முறையைப் போல, அத்தேர்வின் மதிப்பெண்கள் தேர்வில் இறுதித் தகுதியைப் பாதிக்கும் என்றும் கற்றறிந்த கூடுதல் உதவி தலைமை வழக்குரைஞர் வேறுபடுத்துகிறார். மேற்படி விகாஸ் சங்கலா வழக்கில் உள்ள தீர்ப்பு, அந்த ஆட்சேர்ப்பின் தனித்துவமான அம்சத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டது என்றும், அத்தீர்ப்பின் முக்கியக் கோட்பாடு இந்த வழக்கில் பொருந்தாது என்றும் அவர் குறிப்பாக வாதிட்டார்.

9.3. இது, விண்ணப்பதாரர்கள் வயதுத் தளர்வு அல்லது கட்டண விலக்கின் அடிப்படையில் மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வில் தகுதியைப் பெற்ற வழக்கு அல்ல என்றும், அத்தகைய சூழ்நிலையில் எதிர்மேல்முறையீட்டாளர்களின் மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வு மதிப்பெண்கள் எந்த முக்கியத்துவமும் பெறாமல் இருந்திருக்கலாம்

என்றும் கற்றறிந்த கூடுதல் உதவி தலைமை வழக்குரைஞர் எடுத்துரைத்தார். ஆனால், எதிர்மேல்முறையீட்டாளர்கள் மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வில் சாதாரண தேர்ச்சி மதிப்பெண்களை (60%) விடக் குறைவாகப் பெற்று தகுதி பெற்றிருந்தபோது, டெல்லி மாநிலத்தில் உள்ள பொதுப் பிரிவின் காலியிடங்களுக்கு அவர்கள் தகுதியற்றவர்கள் என்று சரியாகவே கருதப்பட்டனர்.

10.1. இதற்கு மாறாக, எதிர்மேல்முறையீட்டாளர்கள் சார்பில் முன்னிலையான கற்றறிந்தஹ் மூத்த வழக்குரைஞர் திருமதி ஐஸ்வர்யா பாட்டி அவர்கள், விளம்பரத்தில் உள்ள அத்தியாவசியத் தகுதியில் தகுதிக்கு எந்தக் குறைந்தபட்ச மதிப்பெண்களும் குறிப்பிடப்படாத நிலையில், எதிர்மேல்முறையீட்டாளர்கள் மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வில் தகுதியைப் பெற்றுள்ளதால், அவர்களைத் தகுதியற்றவர்கள் என்று காண முடியாது என்று வாதிட்டார்.

10.2. எதிர்மேல்முறையீட்டாளர்கள், தாங்கள் ஆட்சேர்ப்புத் தேர்வில், பொதுப் பிரிவின் காலியிடங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட சில விண்ணப்பதாரர்களை விட அதிக மதிப்பெண்களைப் பெற்றதாகவும், எனவே தங்கள் விண்ணப்பத்தை நிராகரிப்பது, நியமனத்திற்குத் தகுதியைப் புறக்கணிப்பதாகும் என்றும் எடுத்துரைத்தனர்.

10.3. உயர் நீதிமன்றம் மற்றும் தீர்ப்பாயத்தின் முடிவை ஆதரித்து, ஆட்சேர்ப்புத் தேர்வில் தாங்கள் பெற்ற தகுதி நிலை அடிப்படையில் நியமனம் கோரும் அசல் விண்ணப்பதாரர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு, மேற்படி விகாஸ் சங்கலா வழக்கில் உள்ள முக்கியக் கோட்பாடு சரியாகவே பயன்படுத்தப்பட்டது என்று திருமதி பாட்டி அவர்கள் வாதிட்டார்.

11. தற்போதைய மேல்முறையீட்டில், நாம் பின்வரும் வழக்கெழு வினாக்களில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது:

i. டெல்லிக்கு வெளியே இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக (Other Backward Classes) தகுதி மதிப்பெண்களில் 5 சதவீத தளர்வைப் பயன்படுத்திக்கொண்டு மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வில் தகுதியைப் பெற்ற எதிர்மேல்முறையீட்டாளர்கள், டெல்லி தேசிய தலைநகர் அரசின் கீழ் உள்ள சிறப்புக் கல்வி ஆசிரியர் பணிக்கு வேலைவாய்ப்புக்குப் பரிசீலிக்கப்பட முடியுமா?

ii. இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் பிரிவின் கீழ் சலுகையைப் பெற்ற பிறகு, எதிர்மேல்முறையீட்டாளர்கள் பொதுப் பிரிவின் கீழ் உள்ள இடங்களுக்கு விண்ணப்பிக்க முடியுமா?

12. ஆசிரியராக நியமனம் பெறுவதற்கு ஒரு நபருக்கான குறைந்தபட்சத் தகுதிகளை வழங்கிய தேசிய ஆசிரியர் கல்வி கவுன்சில் 23.08.2010 தேதியிட்ட அறிவிப்பை வெளியிட்டது என்று இங்குள்ள பதிவுகள் காட்டுகின்றன. அந்த அறிவிப்பு, மற்றவற்றுடன் சேர்த்து குறிப்பிட்டது என்னவென்றால், (குறிப்பிட்ட அறிவிப்பின் வரையறைக்குள் வரும்) ஆசிரியர் பதவிக்கான விண்ணப்பதாரர்கள், தேசிய ஆசிரியர் கல்வி கவுன்சிலின் வழிகாட்டுதல்களின்படி தகுந்த அரசால் நடத்தப்படும் ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என்பதே ஆகும். இந்த அறிவிப்பைத் தொடர்ந்து, 11.02.2011 தேதியிட்ட உத்தரவின் மூலம், தேசிய ஆசிரியர் கல்வி கவுன்சில் ஆசிரியர் தகுதித் தேர்வை

நடத்துவதற்கான வழிகாட்டுதல்களை வெளியிட்டது. ஆசிரியர் தகுதித் தேர்வில் 60 சதவீத மதிப்பெண்களைப் பெறும் ஒரு நபர், ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றவராகக் கருதப்படுவார் என்று வழிகாட்டுதல்கள் வழங்கின. மேலும், பின்தங்கிய பிரிவைச் சேர்ந்த நபர்களுக்கு, அவர்களது தற்போது நடைமுறையில் உள்ள இடஒதுக்கீட்டுக் கொள்கையின்படி சலுகைகளும் வழங்கப்பட்டன.

13. டெல்லி கல்வி இயக்குநரகம் (3 ஆம் மேல்முறையீட்டாளர்) தனது 07.10.2011 தேதியிட்ட அறிவிப்பின் மூலம், டெல்லியில் உள்ள பள்ளிகளில் நியமனம் பெறுவதற்கு, டெல்லி தேசியத் தலைநகர் அரசு மத்திய இடைநிலைக் கல்வி வாரியத்தால் நடத்தப்படும் மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வை அங்கீகரிக்கும் என்று தெரிவித்தது. 3 ஆம் மேல்முறையீட்டாளர், 30.11.2012 தேதியிட்ட மற்றொரு அறிவிப்பின் மூலம், மேற்கூறிய 07.10.2011 தேதியிட்ட அறிவிப்பில் பின்வருவனவற்றை இணைத்தார்:–

> "––
>
> மத்திய இடைநிலைக் கல்வி வாரியம், 60 சதவீதம் மற்றும் அதற்கு அதிகமான மதிப்பெண்களைப் பெறும் விண்ணப்பதாரர்கள் மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வில் தகுதி பெற்றவர்களாகக் கருதப்படுவார்கள் என்ற நிபந்தனையுடன், தேர்வர்களுக்கான மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வு மதிப்பெண் அறிக்கைகளை வழங்கி வருகிறது. மேலும், தேசிய ஆசிரியர் கல்வி கவுன்சில் 29.07.2011 தேதியிட்ட அறிவிப்பின் மூலம், "பட்டியல் வகுப்பினர்/பட்டியல் பழங்குடியினர்/இதர

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/மாற்றுத் திறனாளிகள் போன்ற இடஒதுக்கீடு பிரிவுகளைச் சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்குத் தகுதி மதிப்பெண்களில் 5 சதவீதம் வரை தளர்வு அனுமதிக்கப்படும்" என்று குறிப்பாக வழங்கியது. எனவே, மத்திய இடைநிலைக் கல்வி வாரியத்தால் நடத்தப்படும் மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வில், பட்டியல் வகுப்பினர்/பட்டியல் பழங்குடியினர்/இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/மாற்றுத் திறனாளிகள் போன்ற இடஒதுக்கீடு பிரிவுகளைச் சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்கு, தகுதி மதிப்பெண்களில் 5 சதவீதம் வரை தளர்வு அனுமதிக்கப்படும்

....."

14. விளம்பர எண். 1/13–இன் கூறு 6(iii)–இன் கீழ் உள்ள இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இடஒதுக்கீடு பொருத்தமானதாக இருப்பதால், அது கீழே குறிப்பிடப்பட்டுள்ளது :–

6. இடஒதுக்கீட்டின் பயன்கள்:–

iii) இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள், டெல்லி அரசால் மட்டுமே வழங்கப்பட்ட தங்களது சாதிச் சான்றிதழுடன், நிரப்பப்பட்ட பரிந்துரைக்கப்பட்ட பின்னிணைப்பு I–ஐ வைத்திருக்க வேண்டும்.

15. டெல்லி ஆட்சேர்ப்புச் செயல்பாட்டில், எதிர்மேல்முறையீட்டாளர்கள் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான (டெல்லி) சான்றிதழைப் பெற்றிருக்கவில்லை, அதனால் அவர்களால் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் காலியிடங்களுக்குப் பரிசீலிக்கப்பட முடியவில்லை. மேலும், மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வு வழிகாட்டுதல்களின்படி, பொதுப் பிரிவைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள் மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வில் தகுதி பெறுவதற்கு 60 சதவீத மதிப்பெண்களைப் பெற வேண்டியது அவசியம். எதிர்மேல்முறையீட்டாளர்கள் மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வில் 60 சதவீதத்திற்கும் குறைவான மதிப்பெண்களைப் பெற்றிருந்ததால், அவர்களின் விண்ணப்பம் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் பிரிவின் கீழ் மட்டுமே செல்லுபடியாகும். எனினும், டெல்லி தேசிய தலைநகர் அரசின் மூலம் பெறப்பட்ட இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான சான்றிதழ் இல்லாததாலும், வெளிமாநிலத்து இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இடஒதுக்கீட்டைத் தடைசெய்யும் மேலே உள்ள கூறு 6(iii)–இன் காரணமாகவும், எதிர்மேல்முறையீட்டாளர்கள் விண்ணப்பித்த பதவிக்குத் தகுதியற்றவர்கள் ஆவர். எனினும், அவர்கள் மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வில் குறைந்தபட்சம் 60 சதவீத மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்றால், பொதுப் பிரிவின் காலிப் பணியிடங்களுக்குப் போட்டியிடலாம். ஏற்றுக்கொள்ளப்பட்டபடி, எதிர்மேல்முறையீட்டாளர்களில் எவரும் டெல்லி தேசிய தலைநகர் அரசால் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினராகச் சான்றளிக்கப்படவில்லை; மேலும், விளம்பரம் 1/13–இன் படி, ஒரே அடுக்குத் தேர்வுக்குத் தகுதி பெறுவதற்கான மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வில் தேவையான 60 சதவீத மதிப்பெண்களையும் அவர்கள்

பெறவில்லை, எனவே, மேல்முறையீட்டாளர்களின் வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்க அடிப்படையைக் கொண்டுள்ளது.

16. உயர்நீதிமன்றமும் தீர்ப்பாயமும் எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு இந்தத் தீர்ப்பின் அடிப்படையில் நிவாரணம் வழங்கியதால், இந்த நிலையில் நாங்கள் விகாஸ் சங்கலா வழக்கின் தீர்ப்பைப் பற்றி விவாதிக்க வேண்டியுள்ளது. விகாஸ் சங்கலா வழக்கில் உள்ள ஆட்சேர்ப்பு இராஜஸ்தானுடன் தொடர்புடையது, அங்கு, மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வில் சலுகையைப் பெற்ற விண்ணப்பதாரர்கள், பொதுப் பிரிவின் விண்ணப்பதாரர்களை விட அதிகத் தகுதிவாய்ந்தவர்களாக இருந்தால், பொதுப் பிரிவின் காலியிடங்களுக்கு மாறுவதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

17. எனவே, இராஜஸ்தானில் உள்ள ஆட்சேர்ப்புடன் தொடர்புடைய மேற்கண்ட வழக்கு, தங்கள் சொந்த மாநிலத்தில் காலியிடங்களுக்கு போட்டியிடும் விண்ணப்பதாரர்களுடன், டெல்லியில் உள்ள பொதுப் பிரிவின் காலியிடங்களுக்கு இலகுவான விதிமுறைகளின் கீழ் தகுதி பெற்ற பிற மாநிலங்களைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள் விரும்பும் தற்போதைய சூழ்நிலையில் பொருந்துமா என்பது இங்கே பதிலளிக்கப்பட வேண்டிய கேள்வி.

18. மேற்படி விகாஸ் சங்கலா வழக்கின் தீர்ப்பு, அந்த வழக்கின் சில தனித்துவமான பொருண்மைகளின் காரணமாக எட்டப்பட்டது. அங்குள்ள ஆசிரியர் ஆட்சேர்ப்புச் செயல்முறையானது, ஒவ்வொரு விண்ணப்பதாரரின் இறுதி முடிவு கணக்கீட்டில் 20 சதவீதம் என்பது, அந்த விண்ணப்பதாரரின் ஆசிரியர் தகுதித் தேர்வு மதிப்பெண்களின் அடிப்படையில் இருக்கும் என்று நிபந்தனை விதித்திருந்தது. எனவே,

சலுகையைப் பெற்று மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வில் தகுதியைப் பெற்ற விண்ணப்பதாரர்கள், பொதுப் பிரிவில் பங்கேற்று, தேர்ச்சி மதிப்பெண்களில் அத்தகைய சலுகையைப் பெறாதவர்களை விட, மொத்த மதிப்பெண் கூட்டுத்தொகையில் இயற்கையாகவே குறைந்த மதிப்பெண்களைப் பெற்றிருந்தனர். அந்த பொருண்மைகளின்படி, இடஒதுக்கீடு பிரிவினருக்கு வழங்கப்பட்ட தகுதிக்கான சலுகைகளை, 20 சதவீத அங்கத்தில் ஏற்பட்ட குறைந்த மதிப்பெண்கள் சமன் செய்யும் என்றும், அதன் பிறகு அந்த விண்ணப்பதாரர்கள் எந்தச் சலுகையுமின்றி பொதுப் பிரிவு மாணவர்களுடன் போட்டியிட வேண்டியிருந்ததுடன், 20 சதவீத அங்கத்தில் அவர்களுக்கு இருந்த பின்னடைவையும் வெற்றிகொள்ள வேண்டியிருந்தது என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது. இந்த அம்சத்தில், நீதிமன்றத்தின் கண்ணோட்டம் பின்வருமாறு இருந்தது:–

> ".....இந்த வேறுபாடு புரிந்துகொள்ளப்பட்டால், ஆட்சேர்ப்புச் செயல்முறையைப் பொறுத்தவரை, ஆசிரியர் தகுதித் தேர்வின் தேர்ச்சி மதிப்பெண்களில் தளர்வு அளிப்பதன் மூலம், இடஒதுக்கீடு பிரிவைச் சேர்ந்த விண்ணப்பதாரருக்கு எந்தச் சலுகையும் கிடைக்கவில்லை என்ற முடிவுக்கு அது இட்டுச் செல்லும்."

19. மேலே உள்ள பகுதிகள், ஆட்சேர்ப்புச் செயல்பாட்டில் சமத்துவத்தைப் பேணுவது குறித்த நீதிமன்றத்தின் கவனத்தை வெளிப்படுத்துகின்றன. இருப்பினும், தற்போதைய ஆட்சேர்ப்புச் செயல்பாட்டில், ஈடுசெய்யும் பாதகமான அம்சம் அல்லது சமநிலைப்படுத்தும் காரணி இல்லாததால், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்பட்ட

சலுகையின் காரணமாக மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வில் தகுதியைப் பெற்ற எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு, விகாஸ் சங்கலா வழக்கில் உள்ள கோட்பாட்டை பயன்படுத்த முடியாது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், டெல்லி ஆட்சேர்ப்புச் செயல்பாட்டில், சலுகைக்கான பலன் சமன் செய்யப்படவில்லை. இவ்வாறு, வேறுபட்ட தேர்வு அளவுகோல் பயன்படுத்தப்பட்ட அந்த வழக்கின் தனித்துவமான பொருண்மைகளைக் கவனத்தில் கொள்ளாமல், விகாஸ் சங்கலா வழக்கில் உள்ள முக்கியக் கோட்பாட்டைத் தவறாகப் பயன்படுத்துவதன் மூலம், சமமான போட்டிச் சூழலும் மற்றும் நியாயமான அணுகுமுறையும் அடையப்படவில்லை.

20. மேலே குறிப்பிட்டபடி, விகாஸ் சங்கலாவின் தீர்ப்பில் உள்ள செயல்முறையைப் போலல்லாமல், டெல்லியின் தேர்வுச் செயல்முறையில் தளர்வுக்கு ஈடுசெய்வது இல்லை என்ற போதிலும், மத்திய நிர்வாகத் தீர்ப்பாயம் ராஜஸ்தான் வழக்கின் முக்கியக் கோட்பாட்டை தவறாகப் பயன்படுத்தி எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு நிவாரணம் வழங்கியது.

21.1. விகாஸ் சங்கலா வழக்கில், இராஜஸ்தான் அரசு, பணியாளர் துறையால் (ஏ, நிலை.II) 11.05.2011 தேதியிட்டு குறிப்பு எண்.எஃப்.7(1) டி.ஓ.பி/ஏ –II/99–உடன் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் விளைவை நீதிமன்றம் பரிசீலித்தது, அந்தச் சுற்றறிக்கை, இடஒதுக்கீடு பிரிவைச் சேர்ந்த விண்ணப்பதாரர் தேர்ந்தெடுக்கப்பட்ட கடைசி பொதுப் பிரிவின் விண்ணப்பதாரரை விட அதிக மதிப்பெண்களைப் பெற்றிருந்தால், அவர்/அவள் பெற்ற எந்தச் சலுகையையும் பொருட்படுத்தாமல், பொதுப் பிரிவுக்கு மாறுவதற்கு வெளிப்படையாக அனுமதித்தது. ஆனால் இங்கு, பணியாளர் மற்றும் பயிற்சித் துறையால் வெளியிடப்பட்ட 01.07.1998 மற்றும் 04.04.2018 தேதியிட்ட அலுவலகக் குறிப்பாணைகள்

பரிசீலனைக்குரியவை. மேற்படி விகாஸ் சங்கலா வழக்கில் உள்ள 11.05.2011 தேதியிட்ட சுற்றறிக்கைக்கு மாறாக, திருமதி திவான் அவர்களால் குறிப்பிடப்பட்ட இரண்டு அலுவலகக் குறிப்பாணைகள் குறிப்பிட்ட வழிமுறைகளை வெளியிட்டன, அதன்படி, இடஒதுக்கீடு பிரிவைச் சேர்ந்த ஒரு விண்ணப்பதாரரைத் தேர்ந்தெடுப்பதில், வயது வரம்பு, அனுபவம், தகுதி, எழுத்துத் தேர்வில் கூடுதல் வாய்ப்புகள் போன்றவற்றுக்கு தளர்வான தரநிலை பயன்படுத்தப்படும்போது, அத்தகைய விண்ணப்பதாரர்கள் இடஒதுக்கீடு செய்யப்பட்ட காலியிடங்களுக்கு எதிராக கணக்கில் கொள்ளப்படுவார்கள்.

21.2. சிறப்பாகப் புரிந்துகொள்வதற்காக, மேலே குறிப்பிடப்பட்ட 01.07.1998 தேதியிட்ட அலுவலகக் குறிப்பாணையின் (குறிப்பு எண். 36011/1/98–எஸ்டட்.(ரெஸ்), பணியாளர்கள், பொதுக் குறைபாடுகள் மற்றும் ஓய்வூதியங்கள் அமைச்சகம்) விளைவுகளைப் பற்றி அறிய, தொடர்புடைய பகுதி கீழே மேற்கோள் காட்டப்பட்டுள்ளது :–

> "..... 3. இது தொடர்பாக, பொதுப் பிரிவினருக்குப் பயன்படுத்தப்படும் அதே தரத்தின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் பட்டியல் வகுப்பினர்/ பட்டியல் பழங்குடியினர்/இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் போன்ற விண்ணப்பதாரர்கள் மட்டுமே இடஒதுக்கீடு செய்யப்பட்ட காலியிடங்களுக்கு சரிசெய்யப்பட மாட்டார்கள் என்று தெளிவுபடுத்தப்படுகிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், பட்டியல் வகுப்பினர்/பட்டியல் பழங்குடியினர்/இதர

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் விண்ணப்பதாரர்களைத் தேர்ந்தெடுக்கும்போது, தளர்வான தரநிலை பயன்படுத்தப்பட்டால் – உதாரணமாக, வயது வரம்பு, அனுபவம், தகுதி, எழுத்துத் தேர்வில் அனுமதிக்கப்பட்ட வாய்ப்புகளின் எண்ணிக்கை, பொதுப் பிரிவின் விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்பட்டதை விட விரிவான பரிசீலனை வரம்பு போன்றவற்றில் – அந்த பட்டியல் வகுப்பினர்/பட்டியல் பழங்குடியினர்/இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் விண்ணப்பதாரர்கள் இடஒதுக்கீடு செய்யப்பட்ட காலியிடங்களுக்கு எதிராகவே கணக்கில் கொள்ளப்பட வேண்டும். அத்தகைய விண்ணப்பதாரர்கள், பொதுப் பிரிவின் காலிப் பணியிடங்களுக்குப் பரிசீலிக்கப்படுவதற்குத் தகுதியற்றவர்களாகவே கருதப்படுவார்கள்....."

21.3. அதே சூழலில், இந்திய அரசின் பணியாளர் அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட, 04.04.2018 தேதியிட்ட இரண்டாவது அலுவலகக் குறிப்பாணையின் [குறிப்பு எண். எஃப்.எண்.43011/4/2018–எஸ்டட். (ரெஸ்)], அதாவது 01.07.1998 தேதியிட்ட முந்தைய அலுவலகக் குறிப்பாணையில் கூறப்பட்டதைச் சாராம்சத்தில் மீண்டும் வலியுறுத்தும் தொடர்புடைய பகுதி, உடனடிப் பார்வைக்காகக் கீழே எடுத்துக் கொடுக்கப்பட்டுள்ளது:–

".....இந்தத் துறையின் 02.07.1997 தேதியிட்ட அலுவலகக் குறிப்பாணை எண். 36012/2/96–

எஸ்ட்ட்.(ரெஸ்)–இன் படி வெளியிடப்பட்ட வழிமுறைகளின்படி, மத்திய அரசுப் பணிகள் மற்றும் சேவைகளுக்கான நேரடி ஆட்சேர்ப்புகளில், பொதுப் பிரிவின் விண்ணப்பதாரர்களுக்குப் பயன்படுத்தப்படும் அதே தரத்தின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் இடஒதுக்கீடு பிரிவைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள், இடஒதுக்கீடு செய்யப்பட்ட காலியிடங்களுக்கு எதிராகச் சரிசெய்யப்பட மாட்டார்கள். பணியாளர் மற்றும் பயிற்சித் துறை 01.07.1998 தேதியிட்ட அலுவலகக் குறிப்பாணை எண். 36011/1/98–எஸ்ட்ட்.(ரெஸ்) மூலம் வழங்கப்பட்ட வழிமுறைகளின்படி, இடஒதுக்கீடு செய்யப்பட்ட விண்ணப்பதாரரைத் தேர்ந்தெடுப்பதில், உதாரணமாக வயது வரம்பு, அனுபவம், தகுதி, எழுத்துத் தேர்வில் அனுமதிக்கப்பட்ட வாய்ப்புகளின் எண்ணிக்கை போன்றவற்றுக்கு ஒரு தளர்வான தரநிலை பயன்படுத்தப்படும்போது மட்டுமே, அத்தகைய விண்ணப்பதாரர்கள் இடஒதுக்கீடு செய்யப்பட்ட காலியிடங்களுக்கு எதிராகக் கணக்கில் கொள்ளப்படுவார்கள்....."

22. மேலே உள்ள இரண்டு அலுவலகக் குறிப்பாணைகளின் பகுதியிலிருந்து, விகாஸ் சங்கலா வழக்கில் உள்ளதைப் போலல்லாமல், தகுதிச் சலுகைகள் உட்பட தளர்வுகளைப் பெற்ற இடஒதுக்கீடு பிரிவின் விண்ணப்பதாரர்கள் பொதுப் பிரிவுக்கு மாறுவதற்கு வெளிப்படையான தடை உள்ளது என்பது மிகத் தெளிவாகிறது. எனவே, விளம்பரத்தில்

கொடுக்கப்பட்டுள்ள மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வு தொடர்பான தகுதியானது, 01.07.1998 தேதியிட்ட அலுவலகக் குறிப்பாணையின் உள்ளடக்கங்களை மனதிற்கொண்டு புரிந்துகொள்ளப்பட வேண்டும். தற்போதைய பொருண்மைகளுக்கு விளம்பரத்தைப் பயன்படுத்துவது சரியாக இருக்காது. அதே 01.07.1998 தேதியிட்ட அலுவலகக் குறிப்பாணை, தீபா ஈ.வி –எதிர்– இந்திய ஒன்றியம் (2017) 12 எஸ்.சி.சி 680 என்ற வழக்கில் பரிசீலிக்கப்பட்டது, மேலும் 01.07.1998 தேதியிட்ட அலுவலகக் குறிப்பாணை தொடர்பாக நீதிமன்றத்தின் தீர்முடிவு சரியானது என்று நாங்கள் கருதுகிறோம்.

23. மேற்படி விகாஸ் சங்கலா வழக்கில் உள்ள மற்றுமொரு வேறுபடுத்திக் காட்டும் அம்சம் என்னவென்றால், இடஒதுக்கீடு பிரிவின் கீழ் விண்ணப்பித்த விண்ணப்பதாரர்கள் இராஜஸ்தானைச் சேர்ந்தவர்கள் ஆவர். தேர்வுக்காகவும், அதே மாநிலத்தைச் (அதாவது இராஜஸ்தானைச்) சேர்ந்த ஆர்வலர்களுக்காகவும், இத்தகைய விண்ணப்பதாரர்கள் பொதுப் பிரிவிற்குள் மாறுவதற்கு நீதிமன்றம் அனுமதித்தது. இருப்பினும், இந்த வழக்கில், விண்ணப்பதாரர்கள் (அதாவது எதிர்மேல்முறையீட்டாளர்கள்) டெல்லியைத் தவிர வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர். அவர்கள் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக (வெளிமாநிலத்தவர்களாக) இருப்பதால், மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வில் குறைந்தபட்சம் 60 சதவீத மதிப்பெண்களைப் பெற்றிருந்தால் மட்டுமே பொதுப் பிரிவின் கீழ் பரிசீலிக்கப்பட்டிருக்க முடியும். எதிர்மேல்முறையீட்டாளர்கள் 60 சதவீத மதிப்பெண்கள் பெறவில்லை என்பது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது, இதனால் அவர்கள் தகுதியற்றவர்கள் ஆவர். மேலும், டெல்லிக்கு வெளியே உள்ள மாநிலம்/பிரதேசத்தில் சான்றளிக்கப்படாத ஒரு இதர

பிற்படுத்தப்பட்ட வகுப்பின விண்ணப்பதாரர், டெல்லி அரசால் சான்றளிக்கப்பட்ட இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்காக ஒதுக்கப்பட்ட இடஒதுக்கீடு பிரிவின் பதவிகளில் வேலைவாய்ப்பைப் பெற தகுதியுடையவராக இருக்க முடியாது.

24. எதிர்மேல்முறையீட்டாளர்கள் பொதுப் பிரிவின் காலியிடங்களுக்கு விண்ணப்பித்தனர் என்பதைக் கருத்தில் கொள்வது அவசியம். இந்தக் குழுவில் உள்ள மற்ற அனைவரும், தேர்ச்சித் தளர்வு விதிமுறைகளைப் பயன்படுத்தாமல், சாதாரண தேர்ச்சி மதிப்பெண்களைப் பெற்று, தங்களது மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வு தகுதியைப் பெற்றுள்ளனர். மறுபுறம், எதிர்மேல்முறையீட்டாளர்கள் மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வில் குறைந்த மதிப்பெண்களைப் பெற்றிருந்தபோதிலும், அவர்கள் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பிரிவைச் சேர்ந்த தேர்வர்களாகத் தளர்வுப் பலன்களைப் பயன்படுத்திக் கொண்டதால் மட்டுமே தகுதி பெற முடிந்தது. அவர்களின் தகுதிச் சான்று இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான தளர்வான விதிமுறைகளின் கீழ் பெறப்பட்டதால், அவர்களைப் பொதுப் பிரிவின் காலியிடங்களுக்குத் தகுதியுடையவர்களாகப் பரிசீலிப்பது சரியல்ல என்றும், இதற்கு முரணான வாதம் ஏற்றுக்கொள்ள முடியாதது என்றும் நாங்கள் கருதுகிறோம்.

25. எதிர்மேல்முறையீட்டாளர்கள் தளர்வான விதிமுறைகளின் கீழ் பெற்ற மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வு தகுதியுடன், அவர்களின் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நிலை டெல்லி அரசால் சான்றளிக்கப்பட்டும் அங்கீகரிக்கப்பட்டும் இருந்தால் மட்டுமே, அந்தப் பிரிவின் பதவிகளுக்குத் தகுதியுடையவர்கள் ஆவார்கள். ஆனால், நிலைமை அப்படி இல்லாததால், அவர்கள் இடஒதுக்கீடு செய்யப்பட்ட பிரிவின் காலியிடங்களுக்குத்

தகுதியற்றவர்கள் ஆவர். இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்காக வழங்கப்பட்ட தேர்ச்சி மதிப்பெண்களின் தளர்வுடன் கூடிய மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வில் தகுதியைப் பெற்ற ஒரே காரணத்திற்காக, அவர்களைப் பொதுப் பிரிவின் காலியிடங்களுக்கு மாறவும் போட்டியிடவும் அனுமதிப்பது ஏற்புடையதல்ல. எதிர்மேல்முறையீட்டாளர்கள் பொதுப் பிரிவிற்கான சாதாரண தேர்ச்சி மதிப்பெண்களைப் பெறாததால், பொதுப் பிரிவின் காலியிடங்களுக்கு அவர்களது தகுதியானது உறுதி செய்யப்படவில்லை. எனவே, தற்போதைய செயல்பாட்டில், தேர்வில் அவர்களின் செயல்திறன் எந்த விதத்திலும் பொருத்தமற்றதாக இருக்கும்.

26. முன்பு விவாதிக்கப்பட்டபடி, இந்த வழக்கு தேர்ச்சி மதிப்பெண்களில் சலுகையுடன் பெறப்பட்ட தகுதிகள் பற்றியது. அத்தகைய சலுகை, சிறப்புக் கல்வி ஆசிரியர்கள் ஆட்சேர்ப்பில் உள்ள தகுதி மற்றும் திறமையின் தரங்களில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தும். இந்திய அரசியலமைப்பின் கீழ் இட ஒதுக்கீடு கொள்கைகள் குறிப்பிட்ட வகையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட பிரிவுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்க வேண்டும், மேலும் திறன் மற்றும் தகுதி குறைந்துபோவதைத் தவிர்க்க, இட ஒதுக்கீடு செய்யப்படாத பிரிவு பாதுகாக்கப்பட வேண்டும். எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பு வழக்குரைஞரால் சுட்டிக்காட்டப்பட்டபடி, மேற்படி விகாஸ் சங்கலா தீர்ப்பு, அதன் தனித்துவமான பொருண்மைகளிலிருந்து பிரித்துப் பார்க்கப்பட்டு எடுத்துக்கொள்ளப்பட்டால், மேலும் விண்ணப்பதாரர்கள் தளர்வான விதிமுறைகளின் கீழ் தகுதியைப் பெற்றுள்ளதைக் கருத்தில் கொண்டு, அது பொதுப் பிரிவில் உள்ள தகுதியின் தரத்தை குறைந்து போகச் செய்யும்

என்று நாங்கள் உணர்கிறோம். எனவே, எதிர்மேல்முறையீட்டாளர்களால் இதற்கு முரணாக முன்வைக்கப்பட்ட வாதங்கள் நிராகரிக்கப்படுகின்றன.

27. மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, உயர் நீதிமன்றமும் தீர்ப்பாயமும் எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு நிவாரணம் வழங்கியதில் பிழை புரிந்துள்ளன. டெல்லி உயர் நீதிமன்றத்தின், 21.1.2019 தேதியிட்ட, நீதிப்பேராணை மனு (உ) எண். 557/2019–இல் உள்ள எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை நீக்கறவு செய்யப்படுகிறது, மேலும் இம்மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை குறித்த உத்தரவேதுமில்லை.

மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டது.

<u>பொறுப்புத் துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."